**அ.வ.எண். 215/2023**
**வா.சா.2 : மூர்த்தி**
**தேதி : 19.01.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

தாவா சொத்து உள்ள இடத்தில் எனக்கு இடம் இருந்தது அதை நான் விற்றுவிட்டேன். மனவாடி கிராமத்தில் உங்களுக்கு எந்தகாலத்திலும் சொந்தமாக நிலம் இல்லை என்றால் சரியல்ல. மனவாடி கிராமத்தில் உங்களுக்கு சொந்தமாக நிலம் இருந்ததற்கு ஆதரவாக ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் வீட்டிற்கும் தாவா சொத்திற்கும் அரைக்கிலோமீட்டர் தூரம் இருக்கும். செல்லம்மாளுக்கு இரண்டு பெண் குழந்தைகள். அவர்கள் இருவருக்கும் திருமணமாகிவிட்டது. செல்லம்மாளின் மூத்த மகள் 1ம் பிரதிவாதி நகுல்சாமியின் விட்டில் தான் வளர்ந்தார் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. செல்லம்மாளின் மூத்த மகளின் திருமண செலவுகள் அனைத்தையும் 1ம்பிரதிவாதி நகுல்சாமிதான் செய்தார் என்று சொன்னால் அது பற்றி ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதி நகுல்சாமியின் தாயார் எப்போது இறந்தார் என்றால் அது பற்றி ஞாபகமில்லை. தாவா சொத்திற்குண்டான வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. உங்களுக்கு பிரதிவாதியை பற்றியோ, வாதியைப்பற்றியோ, வாதியின் குடும்பத்தை பற்றியோ எந்த

விவரமும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து முழுவதும் 1ம் பிரதிவாதியின் அனுபவித்தில் உள்ளது என்றும் 1ம் பிரதிவாதி நகுல்சாமி தான் அதில் விவசாயம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல வாதியும் நகுல்சாமியும் சேர்ந்து தான் விவசாயம் செய்து வருகிறார்கள். வாதி தாவா சொத்தில் கூட்டு அனுபவித்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் நெசவுத்தொழில் செய்து வருகிறேன். நீங்கள் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.19 18:47:13 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.